...stered as a Newspaper in Sri Lanka No. [illegible]

# ஐக்கியதீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 31

இதழ் : 6

மாசி

1976

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம் : தோற்றுவாயும் வளர்ச்சியும்
- நிலச்சீர்திருத்தக் குறிக்கோளும் பொருளாதார அபிவிருத்தியும்
- பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்
- தமிழகத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்
- கூட்டுறவு இயக்கத்தின் தொடர்புகள்

ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 31 ‖ யாழ்ப்பாணம், மாசி 1976 ‖ இதழ் 6

# அமைச்சரின் மும்முனைத் திட்டம்

கூட்டுறவு இயக்கம் மீண்டும் மறுசீரமைக்கப்படவிருக்கின்றது எனச் சில காலமாகப் பேச்சுக்கள் அடிபட்டன. கூட்டுறவு இயக்கம் சீர்குலைவு அடையப்போகின்றதோ என்றுகூட சிலர் அச்சம் தெரிவித்துள்ளதை நாம் அறிவோம்.

உணவு, கூட்டுறவு, சிறு கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு S K. K. சூரியாராய்ச்சி அண்மையில் வெளியிட்ட மும்முனைத் திட்டம் இவ்வச்சத்தைப் போக்குகின்றது.

இதற்குச் சற்று முன்னர், வளர்ந்தோர் கல்வி தொடர்பாக ஒரு கருத்தரங்கினை இலங்கை மன்றக் கல்லூரியில் அமைச்சர் ஆசாரப்படி தொடக்கி வைத்தபோது, சில பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில் 'மறுசீரமைப்பு' என்ற பதத்தினைக் கையாளுகின்றன என்றும், தனது குறிக்கோள் கூட்டுறவு இயக்கத்தினை மேலும் வளர்ச்சியடையச் செய்வதே என்றும் அழுத்தந்திருத்தமாகக் கூறினார். 1971—இல் அரசாங்கம் கூட்டுறவு மறுசிரமைப்புத் திட்டத்தினை நடைமுறைப்படுத்திய சூழ்நிலையில் உருவாகாத சில பிரச்சினைகள் இன்று தோன்றியுள்ளனவென்றும், மக்களின் தேவைகள் பெரும்பாலானவற்றைக் கூட்டுறவு இயக்கமே நிறைவுபடுத்துவதனால், குறைபாடுகள் களையப்பட்டு இயக்கத்தின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படவேண்டும் என்றும் அமைச்சர் அக்கருத்தரங்கில் மேலும் கருத்துத் தெரிவித்தார்.

இப்பொழுது அமைச்சர் வெளியிட்டுள்ள திட்டம் முன்பு நிலவிய வீண் பீதிகளைப் போக்குவதாக அமைகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் பயன்முனைப்புள்ள வணிக நிறுவனங்களாக ஆக்கி, அத்தியாவசிய பொருட்களைமட்டுமன்றுஏனைய பாவனைப் பொருட்களையும் அவை நாட்டின் மூலைமுடக்குகளில் கூட வழங்குவதற்கு வழி சமைப்பதே அமைச்சரின் திட்டமாகும். இன்று சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனையாளர்களுக்கு வேண்டிய பொருள்களை ஏன் சில அத்தியாவசிய பொருள்களையே, செம்மையாக வழங்குவதில்லை என்பது பகிரங்க இரகசியம். அமைச்சர் இவ்விடயம் குறித்து சில உதாரணங்களை எடுத்து விளக்கியுள்ளார். இந்நிலையைச் சீர்செய்யும் வழிவகைகளை ஆராயும் பொருட்டு அமைச்சர் உயர்மட்டக் குழுவொன்றினை நியமித்தார். இக்குழு, கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்புள்ளவர்கள் வழங்கிய ஆலோசனைகளை மனதிற்கொண்டு செய்த தகவுரைகளின் அடிப்படையிலேயே அமைச்சர் தனது மும்முனைத் திட்டத்தைத்தயாரித்துள்ளார்.

இத்திட்டம் பரீட்சார்த்தமாக மாத்தறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு அமோக

வெற்றியளித்துள்ளதென்றும், உடனடியாக திருக்கோணமலைப் பகுதியில் நடைமுறைப்படுத்தப் படவிருக்கின்றதென்றும் அமைச்சர் மேலும் அறிவித்துள்ளார். இதனைச் செயற்படுத்துவதற்கு நடைமுறையிலுள்ள சட்டங்கள் இடமளிக்காததால், அவசர காலச் சட்டங்களின் கீழ் இவை நடைமுறைப்படுத்தப்படுகின்றன. திட்டம் செயற்படத் தொடங்கி சற்று காலம் கழிந்ததும் அவசரகாலச் சட்டங்களுக்குப் பதில் சாதாரண சட்டங்கள் இயற்றப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

அமைச்சரின் திட்டப்படி, பலவீனமுற்று நோய்வாய்ப்பட்டிருக்கும் சங்கங்களை நடாத்தும் பொறுப்பு ஐவரைக் கொண்ட கூட்டுறவு அதிகாரச் சபையிடம் ஒப்படைக்கப்படும். இந்த ஐந்து உத்தியோகத்தர்களில் ஒருவராக அரசாங்க அதிபர் நியமிக்கப்படுங்கால், அவரே சபையின் தலைவராக இருப்பார். நன்கு இயங்கும் சங்கங்கள் இவ்வாறு கையேற்கப்படமாட்டா என அமைச்சர் வலியுறுத்தியிருப்பதால், கூட்டுறவாளர்கள் வீணாக மனம் குழம்ப வேண்டியதில்லை. இப்புதிய ஒழுங்கின்மூலம் சீரழிந்து போயிருக்கும் சங்கங்கள் மேல் நிலையை எய்துவதற்கு வழி பிறக்கும் என அமைச்சர் நம்புகிறார். ஐந்து உத்தியோகத்தர்களைக் கொண்ட கூட்டுறவு அதிகாரச் சபை பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய பொருள்களை அவற்றிற்கு வழங்குவதற்கு 21 மத்திய களஞ்சியங்கள் முக்கிய இடங்களில் நிறுவப்படவிருக்கின்றன. இப்பொழுது உள்ள முறையினால் வீண் செலவுகள் ஏற்படுகின்றனவென்றும், விநியோகம் சீரற்றிருக்கின்றதென்றும், புதிய விநியோக முறையினால் இவற்றைத் தவிர்க்க முடியுமென்றும் அமைச்சர் கருதுகின்றார். ஏறக்குறைய 3 கோடி மீதப்படுத்தப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் வகுத்த திட்டத்தின் மூன்றாவது முனை கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குதலே. இப்பொழுது உள்ள ஊக்குவிப்புத் திட்டத்தை விரிவுபடுத்தி பங்கீட்டுப் பொருள்கள் அல்லாத பொருட்களின் விற்பனையினால் ஏற்படும் ஆதாயத்திலிருந்து பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு இத்திட்டம் உத்தேசிக்கின்றது. இத்தூண்டுகை மூலம் பணியாளர் உற்சாகமாக விற்பனையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் இரு சாராரும்—பாவனையாளர்களும் பணியாளர்களும் — நன்மை அடைவர்: பாவனையாளர்களுக்கு வேண்டிய பொருள்கள் கிடைப்பதனால் திருப்தி ஏற்படும், பணியாளர்களுக்கு வருமானம் பெருகும்.

சுருங்கக் கூறின், பாவனையாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் திருப்தியான சேவை அளிப்பதே அமைச்சரின் குறிக்கோள். இத்திட்டத்தின் தாக்கம் காலப்போக்கில் புலனாகும். பாவனையாளரின் பூரண திருப்தியே திட்டத்தின் வெற்றியைக் குறிக்கும்.

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

எமது கூட்டுறவு இயக்கம் இவ்வழக்கிறந்த கோட்பாட்டின் மீது பற்றுக்கொண்டு அதன் குறுகிய எல்லைக்குள் சிறைபட்டுக் கிடந்ததின் விளைவு 45 ஆண்டுகால தடைப்பட்ட வளர்ச்சியே. மூச்சைத் திணறடிக்கும் இத்தடைகள் சில சில வேளைகளில் மீறப்பட்டது உண்மையே. எடுத்துக் காட்டாக, பண்டசாலைச் சங்கங்கள் பங்கீட்டுப் பொருள்களை விநியோகிப்பதற்கு முகவராக நியமிக்கப்பட்டன. உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் விளைபொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும், மானிய உரங்களை விற்பதற்கும் விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் கருவிகளாக இருந்தன. எனினும் இவை சூழ்நிலைகளின் விளைவே ஒழிய கூட்டுறவுக் கோட்பாட்டைப் பற்றி புத்திபூர்வமாக மீன்சிந்தனை செய்ததனுல் அல்ல. மேலும் இது தற்காலிக வழுவுதல், தவிர்க்க முடியாத தீங்கு, உண்மையான கூட்டுறவுக் கொள்கைகளிலிருந்து விலகிச் செல்லுதல் எனக் கருதப்பட்டது. பழைய நிலை மீண்டும் நிலவ வேண்டும். 'தூய்மையான' 'கலப்படமற்ற' கூட்டுறவுக் கொள்கைகள் மீண்டும் நிலைநாட்டப்படும் நாள் வரும் என சில கூட்டுறவாளர் இன்னும் எதிர்பார்த்துக் கிடக்கின்றனர்.

மேலே குறிப்பிட்ட இரண்டாவது குறைபாடு அமைப்போடு தொடர்புள்ளது. தோற்றமளவில் பல்வேறு வடிவங்களைக் கொண்ட இலங்கைக் கூட்டுறவு இயக்கம் இவ்வம்சத்தில் தனித்துவமானது என நினைக்கின்றேன். இன்றுள்ள ஏறக்குறைய 10,500 கூட்டுறவுச் சங்கங்கள் கிட்டத்தட்ட 70 வகைச் சங்கங்களாக வகுக்கப்படலாம். இடைஞ்சல் மிக்க இந்த

அமைப்பின் விளைவாக நேரமும், சக்தியும் பாழாக்கப்பட்டுள்ளன. பாவனையாளர், கடன் பெறுபவர், நெல் விற்பனையாளர், பால் விற்பனையாளர், தும்புப் பொருட்கள் விற்பனையாளர் என்ற முறையில் ஒருவர் பல சங்கங்களில் உறுப்பினராக இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இவற்றில் சில அவரது கிராமத்திற்கு வெளியே அமைந்துள்ளன. இதன் விளைவாக அவர் ஒவ்வொரு சங்கத்திலும் 'தூங்கும்பங்காளி'யாகவே இருக்கின்றார். சங்கங்கள் மீது அவருக்குள்ள அக்கறை படிப்படியாகக் குறைகின்றது, விழிப்புணர்வு தளர்ச்சியடைகின்றது. பதவி வகிப்பவர்களுக்கிடையேயும் பணியாளர்களுக்கிடையேயும் நிலவும் ஊழல் தடுக்கப்படாதிருக்கின்றது. பல்வேறு சிறு சங்கங்கள் இயங்கிவருவதனால் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தரின் மேற்பார்வை, கணக்குப் பரிசோதனைப் பணிகள் சிக்கலாக்கப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, வியாபாரம் குறைந்த இப்பல்வேறு சங்கங்கள் ஒவ்வொன்றும் சொற்ப சம்பளத்தில் முகாமையாளர் ஒருவரை வேலைக்கமர்த்த வேண்டியிருப்பதனால் செம்மையான முகாமைப் பற்றுக்குறை நிலை மேலும் மோசமாகின்றது.

ஆனால் வெறும் தோற்றமளவிலேதான் இந்தப் பல்வேறு வடிவங்கள், பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களை, இறுதி ஆய்வில், இரண்டு அடிப்படை வகைகளுள் ஒன்றிலே அடக்கலாம்; கடனுதவு சங்கங்கள் அல்லது சந்தைப்படுத்துதல் சங்கங்கள். சந்தைப்படுத்துதல் சங்கங்களை மேலும் கொள்வனவு அல்லது பண்டசாலைச் சங்கங்களென்றும் (தங்களது உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் பொருள்களை கூட்டுறவு அடிப்படையில் கொள்வனவு செய்யும் நோக்கம் உடைய சங்கங்கள்) விற்பனவுச் சங்கங்களென்றும் (தமது உறுப்பினர் உற்பத்தி செய்யும் பொருட்களை கூட்டுறவு அடிப்படையில் விற்பனை செய்யும் நோக்கமுடைய சங்கங்கள்) பிரிக்கலாம். விற்பனவுச் சங்கங்கள் என்ற வகையில் மட்பாண்ட சங்கங்கள், பாற்பண்ணைச் சங்கங்கள், விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள்

என்ற பல்வேறு பெயர்கள் ளால் சுட்டப்பட்டுள்ள சங்கங்களை அடக்கலாம். உண்மையில், 'விளைபொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம்' என்ற பதம் பொருத்தமற்றது. ஏனெனில் இச் சங்க உறுப்பினர்கள் விளைபொருள்களின் உற்பத்தியில் அல்ல அவற்றின் விற்பனையிலேயே ஒத்துழைக்கின்றனர். காணி உட்பட, உற்பத்திச் சாதனங்கள் இணைக்கப்பட்டு இறுதியில் பொதுவுடமை ஆக்கப்பட்டாலே இவை உற்பத்திச் சங்கங்களாக விளங்கமுடியும்.

கூட்டுறவு அமைப்பு மறுசீராக்கப்படுவது கூட்டுறவு இயக்கத்தின் ஆரோக்கியமான வளர்ச்சி மட்டுமல்ல, அது தொடர்ந்தும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது என நினைக்கின்றேன். பல்வேறுவகை கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுத்துவதே எனது உத்தேசம். விவசாய அமைச்சின் திட்டமிடல் குழுவும், அண்மையில் நிறுவப்பட்ட விசேட விவசாய கூட்டுறவுக் குழுவும் இந் நடவடிக்கையையே தகவுரை செய்தன. கடன் வழங்குதல், கொள்வனவு, விற்பனவு — இவையே கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் முக்கிய பணிகள். இத்தகைய சங்கம் ஒரு கிராமத்தில் நிறுவப்பட்டதும், பங்கீட்டுப் பொருள்களின் விநியோகம், உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் பொருள்களைக் கொள்வனவு செய்தல், உரத்திற்கான அரசாங்க மானியத்தை வழங்குதல் ஆகியவை இச் சங்கத்தின் ஊடாக உறுப்பினர்களுக்கு மட்டும் செய்யப்படும். இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் போதியளவு நிறுவப்பட்டதும், கூ. மொ. வியினால் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் இவையினூடாக மட்டுமே விற்பனை செய்யப்படும். கிராமக் கூட்டுமான வேலைகளுக்கும், வேறு நோக்கங்களுக்காகவும் தொழிலாளர்களைத் திரட்டி, தனிப்பட்ட தொழில் ஒப்பந்தகாரர் முறையை ஒழிப்பது போன்ற வேறு பல பணிகளையும் இச்சங்கம் ஆற்றலாம். கிராம விவசாயத்திட்டத்தைத் தயாரித்து அது அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெற்றதும், அதனைச் செயற்படுத்தும் பணியும் கிராமக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்படைக்கப்படும்.

சுருங்கக் கூறின், கூட்டுறவு உற்பத்தியைத் தவிர்த்து (அதாவது, உற்பத்தி சாதனங்களை உற்பத்தியாளர் இணைத்து இறுதியில் அவற்றினைப் பொதுச் சொத்தாக கொண்டிருக்கும் நிலை கிராமத்தின் கூட்டுறவு வாழ்வின் சகல அம்சங்களையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தழுவியிருக்கும். அந்நிலையில், வெவ்வேறு உற்பத்தித் துறைகளுக்கு வெவ்வேறான உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கப்படும். திருப்திகரமாக இயங்கிவரும் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுள்ள கடனுதவு சங்கங்களைக் குழப்புவது எனது உத்தேசமல்ல. இச்சங்கங்கள் இயங்குமிடங்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் (இவையும் கடன் வசதிகளை வழங்குகின்றன) அவை தொடர்ந்து பணியாற்றி வரும். கிராமச்சபை மட்டத்தில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து பலநோக்குக் கூட்டுறவுச் சமாசம் நிறுவப்படும். தேசிய மட்டத்தில் இச்சமாசங்கள் செயற்பாடுகள் அடிப்படையில் இணைக்கப்பட்டு, கூட்டுறவு மொத்த வியாபாரச் சங்கம், கூட்டுறவு உச்ச வங்கி போன்றவை நிறுவப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு முதல் நடவடிக்கையாக ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு அபிவிருத்திக்குழு நிறுவப்படும். இதற்காக சகல கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கும், விவசாய போதனாசிரியர்களுக்கும் உணவு உற்பத்தி மேற்பார்வையாளர்களுக்கும் சில கிராமங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்களின் நெறிப்பாட்டுக்கு அமைவாக, இவர்கள் கிராம மக்களின் கூட்டங்களை நடாத்தி இவ்வாண்டு செப்டம்பர் இறுதியளவில் 9—15 உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் தெரிவு செய்யப்படுவதற்கு ஒழுங்கு செய்வர். ஒவ்வொரு கூட்டுறவு அபிவிருத்திக் குழுவின் பணியும் தனது கிராமத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்படுவதற்கு வழிகோலுவதே. இத்தகைய சங்கம் அமைக்கப்படும்வரை, விவசாய விடயங்கள் குறித்து கிராம திட்டமிடல் நிறுவனமாக இக்குழு பணியாற்றும்.

அடுத்த 5 ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பலநோக்குக்

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

(முற்ஞெடர்)

# நிலச்சீர்திருத்தக் குறிக்கோளும் பொருளாதார அபிவிருத்தியும்

டேவிஸ் மக்கன்ரயர்

நிலத்தைச் சமமாகப் பங்கிட வேண்டும் என்ற குறிக்கோள், விவசாய உற்பத்தியைப் பேணி பெருக்க வேண்டிருப்பதால் பெரும்பாலும் கட்டுப்படுத்தப் படுகின்றது. நிலத்தைச் சமமாகப் பங்கிடுதல் உற்பத்தியைப் பெருக்குதல்: இவ்விரு குறிக்கோள்களுக்கிடையேயும் உள்ள முரணை மெக்சிக்கோவின் நீண்ட நிலச் சீர்திருத்த வரலாறு மிகவும் தெளிவாக விளக்குகின்றது. மெக்சிக்கோவில் ஏற்பட்ட புரட்சிப் பின்னணியில் உருவாகிய நிலச் சீர்திருத்தம் பெரும் நிலப் பரப்பை உள்ளடக்கிய கமங்களை அழித்த போதிலும் பல்வேறு வர்த்தகப் பண்ணைகளை (இடைப்பட்ட அளவு தொடக்கம் பெரிய அளவு வரை) அது அனுமதித்தது. இத்தாலியிலும் கூட, பெரிய நிலப்பரப்புக்களைச் சுவீகரிப்பதற்கான சட்டம், விளைவாக்கம் மிக்க கமங்களைப் பாதிக்காத வண்ணம் மிக நுட்பமாக இயற்றப்பட்டது: அவற்றிற்கு விலக்களிக்கப்பட்டது ஒரே ஒரு பிரதேசத்தில் மட்டும்தான். இத்தாலியில் நிலச் சீர்திருத்தச் சட்டம் விளைவாக்கம் மிக்க விவசாயப் பகுதிகளைத் பாதித்தது. போ ஆற்றுப் பகுதி — நிலமற்றபண்ணைக் கூலியாட்களிடையே இங்கு அரசியல் அமைப்பின்மை தாண்டவமாடியது.

சம பங்கீட்டிற்கும் விளைவாக்கத்திற்குமிடையே சம நிலையை எய்துவது வளர்ச்சி குன்றிய நாடுகளிலே மிக்க கடினமாகவுள்ளது. மறுபுறம், இவை நவீன நாடுகள் எனப்படுகின்றன. இதன் விளைவாக, செல்வம் அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றில் மிக மோசமான சமத்துவமின்மை காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக இலத்தின் அமெரிக்காவில் இன்றும் பெரிய நிலப்பரப்பை அடக்கிய கமங்களையும் அடிமைகள்

போன்ற கூலியாட்களையும் காணலாம். மேற்கு ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் இவ்விரு அம்சங்களும் முன்பு எப்போதோ மறைந்து விட்டன. சமத்துவமின்மை, பொது மக்களிடையே வறுமை: இவற்றினுல் உருவாக்கித் திரண்டு வரும் அதிருப்தியும், அமைதியின்மையும் நிலப்பங்கீட்டுக் குறிக்கோளுக்கு பயங்கரமான வலுவினை ஊட்டுகின்றன. வேகமாக வளர்ந்து வரும் குடிமக்கள் தொகை (இதனுல் வறிய கிராமவாசிகளினதும் நிலமற்றவர்களினதும் எண்ணிக்கை படிப்படியாக உயர்கின்றது) இத்தாக்கங்களை மேலும் வலுவடையச் செய்கின்றன.

பொருளாதார அபிவிருத்தியினுல் ஏற்பட்ட நன்மைகள் சமமாகப் பங்கிடப்படாதது குறித்து 1960 களி பிரகடனம் செய்யப்பட்ட 'அபிவிருத்திப் பத்தாண்டுகள்' பற்றிய அண்மைக்கால மதிப்பீடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. வளர்ச்சியினுல் ஏற்படும் நன்மைகள் அனேகமாக ஒரு குறுகிய வட்டத்தினருக்கே சுவறுகின்றன என்று பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி நிறுவனம் கூறுகின்றது. மேல் மொத்தமாக பொருளாதார அபிவிருத்தி வீதங்கள் குறிப்பிடத்தக்க வகையாக இருந்தபோதிலும், பெரும்பாலான வளர்ச்சியுற்று வரும் நாடுகளின் பெரும்பான்மை மக்கள் சிறு விவசாயிகள், பண்ணை கூலியாட்கள், வேலையற்ற நகரப்புற வாசிகள், ஏனையோர் - பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையிலேயே இருக்கின்றனர். வேலையின்மை வீதத்தைக் குறைப்பதற்கோ, விவசாயத்தின் மீது குடிமக்கள் தொகையின் அமுக்கத்தைக் குறைப்பதற்கோ போதுமானதாய் பெரும்பாலான வளர்முக நாடுகளின் வளர்ச்சிவீதங்கள் அமையவில்லை என ஆய்வுகள் மூலம் அறியக்கிடக்கின்றது. ஆசியாவிலே அதிக விளைச்சலைத் தரும் தானிய இனங்களைப் பயன்படுத்தியதன் பயனுக ஏற்பட்ட பசுமைப் புரட்சி உணவைப் பெருக்கியிருப்பது உண்மையே. ஆயினும் பெரிய நிலப்பரப்புக்களை உடைய நிலக்கிழார்களுக்கும் கமக்காரர்களுக்குமே அது பெரும்பாலும் உற்பத்தி நன்மைகளை வழங்கியிருக்கின்றது; கிராமப்புற வேலையின்மையை அது அதி

கரித்திருக்கலாம்.

சாத்தியமான அளவு ஆகக் கூடுதலான மக்கள் தொகையினருக்கு வேலை வாய்ப்புக்களையும் கீழ் எல்லை வரையறுக்கப்பட்ட வருமானத்தையும் வழங்கும் தலையாய நோக்கத்தைக் கொண்டே அபிவிருத்திக் கொள்கைகள் குறிப்பாக நிலச் சீர்திருத்தம், வகுக்கப்பட வேண்டும் என ஆணித்தரமாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாதத்தினை மிக நயம்பட எடுத்துரைப்பவர் திருமதி குசும் நாயர் ஆக இருக்கலாம். இந்தியா குறித்து அவர் எழுதுவதாவது:

"மக்கள் தொகை, மூலவளம், மேல்மொத்த பொருளாதார நிலைமை எதிர்கால நிலைமை ஆகியவற்றை நோக்குமிடத்து, வேறு வழியில்லை. 6 கோடி அல்லது அதற்கு மேலான விவசாயக் குடும்பங்கள் விவசாயத்திலே ஈடுபட்டு, வருமானம் எவ்வளவாக இருந்தபோதிலும் நிலம் உட்பட மூலவளங்களையும் உற்பத்திக் காரணிகளையும் தமக்குள் இயன்றளவு சமமாகப் பங்கிட வேண்டும். காணி நிலத்தைப் பொருட்படுத்தாது, ஒவ்வொரு கிராமத்துக்கும் இரண்டு ஏக்கர்களையாவது வழங்குவதற்கு, தனி உடைமை உச்ச வரம்பை 20 ஏக்கராக வரையறுக்க வேண்டி வரும். உண்மைக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும். வருங்காலத்தில் எத்தனையோ தசாப்தங்களுக்கு, இம்மக்கள் குடிபெயருவதற்கு விரும்பினாலும் சித்தமாக விருந்தாலும், அவர்களுக்கு வேறு வழியே இல்லை அவர்கள் குடிபெயர்ந்து வேறெங்கும் செல்வதற்கு வேலையோ இடமோ இல்லை."

விவசாயத் துறையைத் தழுவாத வேலைவாய்ப்புக்கள் பெருகியிருக்கும் நாடுகளிலே நிலைமை வேறு: இதன் பயனாக விவசாயத்தில் தங்கியிருக்கும் மக்களின் தொகை குடிமக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது குறைந்திருக்கின்றது. இந்நாடுகளிலே, மரபுவழிவந்த நிலச்சீர்திருத்தக் குறிக்கோள் சம பங்கீடு முக்கியத்துவம் இழக்க, விவசாயத்துறையிலே ஈடுபடும் மக்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கம் வலுவடைகின்றது.

கிராமப்புறங்களிருந்து மக்கள் குடிபெயர்வது, நிலம்பற்றிய கடைப்பிடிக்கப்படும் கொள்கையைக்

குறைந்தது மூன்று வழிகளிலேயாவது முக்கியமாகப் பாதிக்கின்றது. முதலாவதாக, கிராமப்புறத்திலிருந்து திரளாகத் தொழிலாளர் வெளியேறுவதனாலும், கிராமத்தில் எஞ்சியிருப்பவர்களின் கவனம் கிராமத்திற்கு அப்பாலே செல்வதனாலும், நிலத்தைப் பங்கிட வேண்டும் என்ற அரசியல் வற்புறுத்தல்களைக் கிராமப்புறக் குடிபெயர்வு நிச்சயமாக வலுவிழக்கச் செய்கின்றது. இரண்டாவதாக, கிராமப்புற வாசிகளின் வருமான எதிர்பார்ப்புகள் உயர்கின்றன: நிலச்சீர்திருத்தம் மூலம் கிடைக்கப்பெறக்கூடிய சிறுகமம் அவ்வளவு கவர்ச்சிகரமாகத் தோன்றுவதில்லை. புதிய எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப வருமானத்தைக் கொடுக்கவல்லதாக கமம் அமைந்தால்தான் தொடர்ந்தும் விவசாயத்தில் ஈடுபடலாம் என மக்கள் கருதுகின்றனர். மூன்றாவதாக, கிராமப்புறத்தில் தொழிலாளர் பற்றாக்குறையும், கிராமவாசிகளின் புதிய வருமான எதிர்பார்ப்புக்களும் இணைந்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் பெரியளவிலான காணி நிலம் கிடைக்கக் கூடியதாக காணிப் பங்கீடு அமையவேண்டுமென நிர்ப்பந்திக்கின்றன.

நிலச் சீர்திருத்தத்தில் பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்தும் இத்தகைய தாக்கங்களை இத்தாலியின் அனுபவம் – நிலச்சீர்திருத்த மத்தியில் பொருளாதார மாற்றமும், பெருமளவிலான கிராமப்புற குடிபெயர்வும் ஏற்பட்டன – தெளிவாகக் காட்டுகின்றது.

1950 இல் தொடங்கப்பட்ட இத்தாலிய நிலச்சீர்திருத்தத்தின் அடித்தளம் வருமாறு: (1) வறியவர்களாகிவிட்ட கிராமப்புற வாசிகள் (2) வேலையின்மை குறைவேலை ஆகிய பாரிய பிரச்சினைகள் நிலவியதுடன் கிராமப்புறங்களில் மக்கள் தொகையின் தாக்கம் (3) பெரியளவில் அமைந்த சில ஆதனங்களும்(எண்ணிக்கையில் குறைவு) அதிகமாக பயன்படுத்தப்பட்ட காணிகளும் (4) நிலமற்ற கிராமவாசிகளின் அதிருப்தியைப் பயன்படுத்திய சக்திமிக்க பொதுவுடமைக் கட்சியினால் ஏற்படக்கூடிய புரட்சி ஆபத்து.

நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குதல் என்ற பழைய குறிக்கோளுடன், விவசாய உற்பத்தியை

ஊக்குவித்தல் என்ற நவீன குறிக்கோளை இத்தாலிய கொள்கை வரையறுப்பாளர்கள் இணைத்தனர். சமூக வுடைமை வாதத்திற்கு முரணான தனியாள் சொத்துரிமை, மூன்ருவது நோக்கம் காணியற்ற தொழிலாளிகளை நவீன விவசாயத்தில் ஈடுபட வல்லவர்களான சொந்தக் காணிகளையுடைய உழவர்களாக மாற்றுவதே சீர்திருத்தத்தின் குறிக்கோள்.

வரலாற்றிலேயே இது போன்று திட்டமிடப்பட்டு நிர்வகிக்கப்பட்ட நிலச்சீர் திருத்தம் இல்லை என்ருல் மிகையாகாது. வெறுங் காணிகள் அல்ல, அபிவிருத்தி செய்யப்பட்ட சிறு கமங்களும் சாதனங்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. கடன்வசதிகள், தொழில் நுட்ப வழிகாட்டுதல், பொருளாதார, கல்வி, உடல்நல, சமூக சேவைகள் ஆகியவை இவர்களுக்கு வழங்கப்பட்டன. வாழ்க்கை நிலைமைகளை உடனடியாக உயர்த்தும் பொருட்டு, ஒவ்வொரு கமத்திலும் நவீன இல்லம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. கம முகாமையை மேம்படுத்தும் பொருட்டு மரபு வழிவந்த இத்தாலிய கிராம குடியிருப்பு அமைப்பை நிலச்சீர்திருத்தம் மாற்றி, கமங்களிலேயே குடும்ப இல்லங்கள் அமைக்கப்பட்டன. முன்பு, குறிப்பாக வறிய தென்பகுதியிலே இத்தாலிய விவசாயத்தின் பெரும்பகுதியை கமங்களின்றிய விவசாயம் எனலாம். இங்குமங்கும் இருந்த காணித் துண்டுகளிலே பயிர் செய்யும் பொருட்டு ஒவ்வொரு நாளும் உழவர் குன்றுகள் மீது அமைந்திருந்த தமது கிராமங்களிலிருந்து விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைத் தாங்கிய வண்ணம் புறப்பட்டனர். இந்த அமைப்பை நிலச்சீர்திருத்தம் மாற்றியது. சேவை நிலையங்களை நோக்கிச் செல்லும் வீதிகளுக்கு அருகாமையில் ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப தொழிற்படு கமங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. வருமான ரீதியாகப் போதுமானது என்று வல்லுனர்கள் கருதியதற்கும் உள்ள காணியை ஆகக்கூடிய நிலமற்ற குடும்பங்களுக்கிடையே பங்கிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குமிடையே கமத்தின் அளவு வரையறுக்கப்பட வேண்டியிருந்தது.

(தொடரும்)

(முற்றொடர்)

# பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்

ஆ. அவ்வப்பகுதி பாவனையாளர்களின் தேவைக்கு ஏற்றவாறு எவ்வெவ் விற்பனைப் பொருள்களை கொள்வனவு செய்வது, அவற்றின் தரம், அளவு, அவற்றினை எங்கிருந்து பெறுவது ஆகியவற்றை காலத்துக்குக் காலம் ஆலோசனை உபகுழு நிர்ணயித்தல் வேண்டும்.

இ. சில்லறை வியாபாரிகள், பாவனையாளர்கள் குறித்து அரசாங்கத்தின் வழங்கீட்டுக் கொள்கைக்கு அமைவாக நெறியாளர் குழு, அல்லது ஆலோசனை உபகுழு பாவனையாளர் தேவைகளை ஆராய்ந்து அறிந்தபின்னர், சங்கம் கையாளவேண்டிய விற்பனைப் பொருள்களை நிர்ணயித்தல் வேண்டும். உபகுழு அனுமதி வழங்காத எப்பொருளையும் சங்கம் கொள்வனவு செய்யலாகாது. பாவனையாளர்களின் சுவைகளிலும் விருப்புகளிலும் பொருட்களின் தரமும் விற்பனை விலையும் தங்கியிருத்தல் வேண்டும்.

ஈ. பொருட்களை எங்கிருந்து பெறுதல், அவற்றின்வகை, விலை ஆகியவை அவ்வப் பகுதி பாவனையாளர்களுக்கு ஏற்றவாறே இறுதியில் நிர்ணயிக்கப்படல் வேண்டும். பின்வரும் முதன்மை ஒழுங்கின்படி கொள்வனவுகள் செய்யப்படல்வேண்டும். அரசு, அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தனிப்பட்ட உற்பத்தியாளர், ஏகமுகவர்கள், மொத்த வியாபாரிகள் இம் முதன்மை ஒழுங்கில் ஏதாவது மாற்றம் செய்யப்படின் அது அறிவிக்கப்படல் வேண்டும். அத்துடன் பொருள்களின் வகை மாதிரியை அனுப்பி மாற்றத்திற்கான காரணங்கள் காட்டப்படல் வேண்டும்.

உ. படிவம் 23இன் அனுப்பாணைகளினதும், ஆலோசனை உபகுழுவின் முடிவுகளினதும் அடிப்படையிலே கொள்வனவுகள் யாவும் செய்யப்படல்வேண்டும். தனியார் துறையிடமிருந்து ரூபா 1000,- மேற்பட்ட கொள்வனவுகள் உபகுழுவின் விசேட அதிகாரத்தின் பேரிலே செய்யப்படல் வேண்டும்.

ஊ. பாவனையாளர்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் அதே வேளையில் ஆகக்கூடிய விற்பனைச் சுழற்சிகள் ஏற்படுவதிலேயே விற்பனைப் பொருள் கையிருப்பு தங்கியிருத்தல் வேண்டும்.

## 33. விற்பனைப் பொருள் கையிருப்பு முகாமை

அ. சில்லறை பண்டசாலைகளுக்குப் பொருள்கள் விற்பனைக்கு நேரடியாக அனுப்பப்படுவதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவை கிடைக்கப்பெற்றதற்கான ஆவணங்கள் பெறப்படல் வேண்டும். இத்தகைய நேரடியான போக்குவரத்து வசதிகள் இல்லாதவிடத்து மையமான மொத்த நிலையத்திலிருந்து வினியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ. அதிகாரமளிக்கப்பட்ட பணியாளருக்கு இறுதியாகக் கையளிக்கப்படும்வரை கையிருப்பிற்கான பொறுப்பு, கொள்வனவு, உத்தியோகத்தர் அல்லது போக்குவரத்து முகவர் அல்லது போக்குவரத்து பணியாளரைச் (எது பொருத்தமோ) சாரும்.

இ. தமகு ஒப்படைக்கப்படும் கையிருப்புக்களுக்குப் பொறுப்பாக ஒருமித்தும் தனித்தும் மொத்த அல்லது சில்லறை நிலையங்களின் பணியாளர்கள் முகாமைப் பகுதியினருடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

ஈ. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இருக்கச்கூடிய ஆகக் கூடியதும் ஆகக் குறைந்ததுமான மிச்சக் கையிருப்பின் பெறுமதியை வரையறுப்பதன் மூலம் படிவம் 15 அறிக்கைகள்படி கையிருப்புக்கள் நிருவகிக்கப்படல் வேண்டும். மொத்த வியாபார நிலைய முகாமையாளர், அதிகாரமளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் எழுத்துமூலமான உத்தரவின்றி பொருட்கள் எவற்றையேனும் கிளைகளுக்கு மாற்றலாகாது. படிவம் 15 அறிக்கைகளை ஆராய்ந்த பின்பே அவ்வுத்தியோகத்தர் இம்மாற்றங்களை அங்கீகரித்தல் வேண்டும்.

உ: ஒரு கடையில் இருக்கக்கூடியதென அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய மிச்ச கையிருப்பு வரை திருட்டினாலும், தீயினாலும் ஏற்படும் நட்டங்களுக்கு எதிராகக் காப்புறுதி செய்யப்படல் வேண்டும்.

ஊ. விலைபோகாத கையிருப்புக்கள் பற்றி குறைந்தது மாதத்தில் ஒரு தடவையாவது சில்லறைக்கிளை முகாமையாளர் அறிவித்தல் வேண்டும். 3 மாதங்களுக்கு மேலாக விலை போகாதிருக்கும் கையிருப்புக்களை வேறு கிளைகளுக்கு மாற்றுவதற்கோ அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான முறையில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

எ. பொதுமுகாமையாளரின் தற்றுணிபதிகாரத்துக்கு ஏற்ப நுகர்ச்சியாளர் கிளை ஒவ்வொன்றிலும் உள்ள கையிருப்புக்கள் மாதம் ஒரு தடவை சரிபார்க்கப்படல் வேண்டும். கிளைகளில் உள்ள கையிருப்புக்கள் திடீர் பரிசோதனைகளுக்கு உட்பட்டன.

## 34. விற்பனைக்கான கையிருப்புக்கள் பற்றிய விலைக் கொள்கை.

அ. பொருள்களின் விற்பனை விலையை வரையறுக்கும்போது பின்வரும் காரணிகளைக் கவனத்திற் கொண்டு வெவ்வேறு பொருள்களின் மொத்த ஆதாய எல்லையை விற்பனை விலையின் ஒரு வீதமாக பொதுமுகாமையாளர் உபகுழுவின் ஆலோசனையுடன் நிர்ணயிப்பார்.

1. அது சந்தை விலைக்குக் கூடுதலாக இருத்தலாகாது.

2. கட்டுப்பாட்டு விலைக்குட்பட்ட பொருள்களின் விலை கட்டுப்பாட்டு விலைக்குக் கூடுதலாக இருத்தலாகாது.

3. முகவை பொருட்களின் விலை உற்பத்தியாளரின் சில்லறை விலையாய் இருத்தல் வேண்டும்.

4. விநியோக நிருவாக, நிதிச் செலவினங்களை உள்ளடக்கப் போதுமானதாய் மொத்த ஆதாய எல்லைகள் இருத்தல் வேண்டும்.

5. பண்டசாலைகளில் கையிருப்புக்கள் இருக்கும்போது சுருங்குதல், காய்வளவு, கழிவாகுதல் ஆகியவற்றிலும், ஏனைய இயற்கையான வணிகக் கழிவுகளிலும் ஏற்படும் சேதாரங்களின் மதிப்பீட்டை ஆதாய எல்லை உட்படுத்துதல் வேண்டும்.

6. இழப்பு, சில்லறைச் செலவுகள், கட்டுப்பாட்டு விலைப் பொருட்களின் விற்பனை ஆகியவற்றினால் ஏற்படும் நட்டங்களை ஈடுசெய்யும் வகையில் தொடர்புள்ள பொருள்களின் ஆதாய எல்லைகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

7 அ. மூலதனத்திற்குப் போதிய மீள்வரவு, பாவனையாளர்களுக்குக் கழிவு, பணியாளர்களுக்கு மிகையூதியம், சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்குப் போதுமான ஒதுக்கீடுகள் ஆகியவற்றை ஈடுசெய்யக் கூடியதாய் ஆதாய எல்லை இருத்தல் வேண்டும்.

ஆ. எல்லா விற்பனை நிலையங்களிலும் சங்கம் ஒரே விற்பனை விலையைக் கடைப்பிடித்தல் வேண்டும். எனினும் அத்தியாவசியமற்றதும், மேலதிகமானதுமான பொருள்களின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டு குறிப்பிட்ட தொகை அளவுகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படலாம்.

## 35. விற்பனை

அ. மொத்த, சில்லறை வியாபார நிலையங்கள் மூலம் பொதுவாக விற்பனை நடாத்தப்படலாம், எனினும் அவசர நிலைமைகளுக்கேற்ற நடமாடும் விற்பனை நிலையங்களை அல்லது பொருள்களை வீட்டில் வழங்கும் சேவைகளைத் தொடங்கலாம்.

ஆ. பொதுவாக, ரொக்கத்திற்காக விற்பனை நடாத்தப்படலாம். எனினும் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரின் அங்கீகாரத்துடன்

பின்வருவோர்க்கு கடன் விற்பனைகள் செய்யப்படலாம் :

1. அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள்
2. கொள்வனவு, முற்பணம் செலுத்தியோர்.
3. கிராமிய கடன் வசதிப் பகுதியினுல் கடன் எல்லைகள் அங்கிகரிக்கப்பட்ட உறுப்பினர்கள்

## 36. காய்வளவுக்கான எல்லைகள் :

கூ. ஆ. ஆணையாளரின் அங்கிகாரத்துடனேயே மொத்த, சில்லறை விற்பனை நிலையங்களிலுள்ள கையிருப்புக்களில் ஏற்படும் காய்வனவு, கழிவாகுதலுக்கான எல்லைகள் அனுமதிக்கபடல் வேண்டும். இந்த எல்லைகளை அனுமதிக்கும்போது கையிருப்பின் நிலை, கடையில் அது கிடந்தகாலம், விநியோகமுறை தட்பவெப்பநிலை, ஆகியவற்றிற்குத் தக்க முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

## 37. தாரை வெற்றுப் பொருள்கள் பொதிவுப் பொருட்களுக்கான கழிவுகள் :

அ. விற்பனைக்கான கையிருப்புக்கள் மொத்த நிறையில் வழங்கப்படும்போது, முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட நிலையான தாரை, அல்லது வழங்கீட்டுக்குப் பின் எஞ்சியிருக்கும் பொதிவுப் பொருளின் உண்மையான நிறை படிவம் 17-ல் பதியப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்; படிவம் 17 ஆவணங்கள் வைக்கப்பட்டு வந்தால், உறுதிப்படுத்தல் மாதத்திற்கு ஒரு தடவை செய்யப்படல் வேண்டும்.

ஆ. இவ்வேலையைச் செய்வதற்கு குறைந்தது இரு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களையாவது பொது முகாமையாளர் காலத்துக்குக்காலம் நியமித்தல் வேண்டும்.

## 38. காப்புறுதி :

அ. சங்கத்தின் எல்லாச் சொத்துக்களையும் குறிப்பாக, இரும்புப் பெட்டியிலுள்ள ரொக்கம், கொண்டுசெல்லப்படும் காசு, வியாபாரக் கையிருப்பு, சாதனங்கள், மோட்டார் வாகனங்கள், இயந்திரங்கள், கட்டடங்கள் தொழிலாளர் (நட்டஈட்டிற்காக) ஆகியவையை நெறியாளர்குழு நிர்ணயித்த உச்சப் பெறுமானம் வரை, காப்புறுதி செய்வது பொதுமுகாமையாளரின் பொறுப்பாகும்.

ஆ. புதுப்பிக்க வேண்டிய திகதிகள், குறிக்கப்பட்டிருக்கும் காப்புறுதி பதிவேடு வைக்கப்பட்டிருத்தலுக்கு பொதுமுகாமையாளர் ஏதுவாய் இருத்தல் வேண்டும். ஏதேனும் காப்புறுதிப்பத்திரம் செல்லுபடியாகாதவாறு காப்புறுதிக் கட்டணங்களை அவர் தொடர்ந்து செலுத்தி வருதல் வேண்டும்.

இ. பாதுகாப்புக்கருதி எல்லாக் காப்புறுதிப் பத்திரங்களும்

வங்கியில் வைக்கப்படல் வேண்டும்.

## 39. மோட்டார் போக்குவரத்துப் பகுதி:

அ பொதுமுகாமையாளரின் அல்லது விற்பனை முகாமையாளரின் அல்லது அவருக்குக்கீழ் நேரடியாக வேலை செய்யும் பணியாளரின் மேற்பார்வையில் சங்கத்தின் எல்லா வாகனங்களும் இருத்தல் வேண்டும்.

ஆ. பின்வரும் சேவைகளில் மட்டுமே வாகனங்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

1 சங்கத்தின் செயற்பாடுகள்
2 வேறு கூட்டுறவுச் சங்கங்களின் போக்கு வரத்து செயற்பாடுகள்.
3 உறுப்பினர்களின் நடவடிக்கைகள்.
4 அரச சேவைகள்.

இ. சங்கத்தின் நாளாந்த அலுவல்கள் தடைப்படாவண்ணம், பொதுமுகாமையாளரின் திட்டவட்டமான அங்கீகாரத்துடனும், வாடகைப்பணம் முன்கூட்டியே அறவிடப்பட்டதன் பேரிலும், சங்க உறுப்பினர் அல்லது அரச பணியாளர் எவரதும் போக்குவரத்துச் செயற்பாடுகளுக்காக வாகனங்கள் பயன்படுத்தப்படலாம்.

ஈ. தலைவரினது அல்லது நெறியாளர் குழுவினது அங்கீகாரத்துடன் உறுப்பினர் அல்லது பணியாளரின் பொதுநல நடவடிக்கைகளுக்காக வாகனங்கள் பயன்படுத்தப்படலாம்.

உ. ஒரு வாகனம் ஏதேனும் விபத்தில் சிக்குங்காலை அது குறித்து பொதுமுகாமையாளருக்கு சாரதி உடனடியாக அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. பொருத்தமான பதிவுப் பத்திரத்தில் ஏதேனும் வாகனத்தின் போக்குவரவு பதியப்படல் வேண்டும். உதிரிப்பாகங்களின் விலை மதிப்பிடப்பட்டு பொருத்தமான கணக்கில் பதியப்படல் வேண்டும்.

எ. வாகன சொத்துப் பதிவேடும் பழுதுபார்த்தல் பாகங்களின் பதில் வைப்புப் பதிவேடும் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வாகனங்களில் பாவிக்கப்படும் பட்டரிகள், டயர்கள், டியூப்கள் ஆகியவற்றின் மீது போதிய கட்டுப்பாடு விதிக்கும் பொருட்டு பதிவுகள் வைக்கப்படல் வேண்டும்.

ஏ. குறைந்தது ஆதாயமோ, இழப்போ இல்லாத நிலை ஏற்படும் பொருட்டு சங்கத்தின் வாகனங்களை முழு அளவிற்கும் பாவிப்பதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 40. சந்தைப்படுத்தல் பகுதி:

அ. நெறியாளர் குழு தீர்மானிப்பதற்கு ஏற்ப உத்தரவாத திட்டத்திற்கு உட்பட்ட அல்லது உட்படாத பொருட்களையும் விளைபொருட்களையும் இப்பகுதி சந்தைப்படுத்துதல் வேண்டும். சாத்தியப்பாடு அறிக்கையும் உத்தேச மதிப்பீடுகளும்

மதிப்பிடப்பட்டபின்பும் நெறியாளர்குழு அங்கீகரித்ததுமே ஏதேனும் புதுப் பொருள் சந்தைப்படுத்தப் படல் வேண்டும்.

ஆ. அரசின் உத்தரவாத திட்டத்துக்கு உட்பட்டதைத் தவிர்ந்து, ஏனைய விளை பொருள்களை சந்தைப் படுத்துவதில் சங்கம் தரகராகவல்லாது முகவராக நடந்துகொள்ள வேண்டும்.

இ. உற்பத்தியாளரான உறுப்பினரின் ஒப்படைப்பு முகவராக இருக்கும் சங்கம், தனது செலவுகளையும் வேறு சேவைச் செலவுகளையும் ஈடு செய்வதற்காக விற்பனை வருவாயிலிருந்து போதுமான முகவர் பங்கைக் கழித்து மிச்சத்தைக் உற்பத்தியாளருக்கு கொடுத்தல் வேண்டும்.

ஈ. கழிக்கப்படவேண்டிய சந்தைப்படுத்துதல் பங்கின் தொகையை நெறியாளர் குழு நிர்ணயித்தல் வேண்டும்.

உ. சங்கத்தின் கிளைகளினூடாகவே சந்தைப்படுத்துதல் நடவடிக்கைகள் பொதுவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். விசேட சூழ்நிலைகளில், நெறியாளர் குழுவின் அங்கீகாரத்துடன் விசேட கிளைகள் திறக்கப்படலாம்.

ஊ. சில்லறை, விசேட கிளைகளில் சந்தைப்படுத்துதலில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களுக்கு, அவர்கள் கையாளும் விளைபொருள்களின் அளவுக்கு ஏற்ப தரகுப் பங்கு வழங்கப்படலாம், இத்தரகு வீதம் நெறியாளர் குழுவினால் வரையறுக்கப்பட்டு கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

## 41. உற்பத்திப் பகுதி:

அ. தனது அல்லது மாவட்ட அபிவிருத்திச் சபையினது திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தனது தொழிற் பரப்பிலுள்ள மூலப் பொருள்களையும் தொழிலாளர்களையும் பயன்படுத்தி சங்கம் கூட்டு உற்பத்தியை ஆரம்பிக்கலாம்.

ஆ. இப்பகுதியின் முகாமை, மேற்பார்வை மட்டங்களைத் தவிர்ந்த சகல பணியாளர்களும் சங்க உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

இ. உறுப்புரிமை வகிக்கும் தொழிலாளர்க்கு வழங்கப்படும் கொடுப்பனவு அவர்களுடைய ஆக்க அளவு அடிப்படையில் அமைதல் வேண்டும். அது உழைப் பூதியமாக அல்ல ஆற்றப்பட்ட சேவைகளுக்கான முதல் முற்பணமாகக் கருதப்படல் வேண்டும்.

ஈ. ஒவ்வொரு தனிப் பகுதியினதும் வருமான, செலவுக் கணக்குகள்—அது மாவட்ட அபிவிருத்திச் சபையின் திட்டமாகத் தொடங்கப் பட்டாலென்ன இல்லாவிட்டாலென்ன—ஒரு துணைப்பேரேட்டில் பதியப்படல் வேண்டும். பொதுச் சபையின் அங்கீகாரத்துக்கு

அமைவான நெறியாளர் குழுவின் முன்கூட்டிய அங்கீகாரம் இன்றி இத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட செலவினங்களுக்கு மேலாக ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படலாகாது.

உ. வெவ்வேறு செய்திட்ட முகாமையாளர்களால் கையொப்பமிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தேவைக் கோரிக்கையின் அடிப்படையில் மத்திய களஞ்சியத்தினூடாக மட்டுமே வெவ்வேறு செய்தித் திட்டங்களுக்கு இயந்திரங்கள், சாதனங்கள், மூலப்பொருட்கள் வழங்கப்படல் வேண்டும். மத்திய களஞ்சியம் பெறும் வழங்கும் எல்லாக் களஞ்சியப் பொருள்களும் அலகுக்கூறு அடிப்படையில் பதியப்படல் வேண்டும்.

ஊ. சங்கத்தின் நிதி ஆண்டின் முடிவில் இறுதி இலாப நட்டக் கணக்கைத் தயாரிக்க முன்பு, கூட்டு உற்பத்திப் பொருள் பகுதிகளின் வரவு செலவுக் கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். இச் செய்தித் திட்டங்களால் பெறப்படும் மேலதிகத்தில் 50 வீதத்திற்கு மேற்படாத தொகை உறுப்புரிமை வகிக்கும் தொழிலாளர்களுக்கு இரண்டாவது கொடுப்பனவாக வழங்கப்படல் வேண்டும். மிகுதித் தொகை பொது இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்.

**42. நெறியாளர் குழு :**

அ. உபவிதி 61க்கு அமைவாக மாதத்திற்கு ஒரு தடவையாவது நெறியாளர் குழு கூடுதல் வேண்டும். ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பாகவுள்ள நிறைவேற்று உத்தியோகத்தரிடமிருந்து பின்னணித் தகவல்களைக் கொண்ட ஆவணங்களையும் நிகழ்ச்சி நிரலிலுள்ள ஒவ்வொரு விடயமும் குறித்து அவர்களது தகவுரைகளையும் பொதுமுகாமையாளர் பெற்று, அவற்றின் பிரதிகளை, கூட்ட அறிவித்தலோடு, நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆ. கடைசியாக நடைபெற்ற நெறியாளர்குழுக் கூட்டக் குறிப்புகளின் பிரதிகள் அடுத்துவரும் கூட்டத்திற்கான அறிவித்தலுடன் நெறியாளர்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இ. ஒவ்வொரு மாதமும் 5-ம் திகதிக்குப் பின்னர் கூட்டப்படும் முதல் நெறியாளர் குழுக் கூட்டத்திற்கு, பொதுமுகாமையாளர் பின்வரும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1 முன்னைய மாதங்கள் குறித்து படிவங்கள் 28, 32, 33.

2 சென்ற மாதத்தின் சோர்வுகள், குறைவுகள் பட்டியல்

3 வங்கிக்கணக்கு இணக்கக் கூற்று

4 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக நேர ஊதியமும் பிரயாணச் செலவும்

## 43. சங்கத்தின் புத்தகங்கள் ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் :

அ. சங்கத்தின் புத்தகங்கள், ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் ஆகியவற்றை உரிய பணியாளரின் பாதுகாப்பிற்குப்பொதுமுகாமையாளர் விதிமுறைப்படி ஒப்படைத்தல் வேண்டும். அவற்றின் பாதுகாப்பிற்கு வேண்டிய சகல வசதிகளையும் அவர் வழங்குதல் வேண்டும் புத்தகங்கள், ஆவணங்கள், நிலையானசொத்துக்கள் ஆகியவற்றைப் பணியாளர் பொறுப்பேற்று கைச்சாத்திட்ட ஆவணங்களின் பிரதி ஒன்று அவ்வப் பணியாளர்களின் தனியாள் கோப்பில் வைக்கப்படல் வேண்டும். இன்னொரு பிரதி கோப்பில் சேர்க்கப்படுவதற்காக, கூ. உ. ஆ. ஆணையாளரின் அலுவலகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆ. பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள புத்தகங்கள், ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் ஆகியவற்றின் பதிவேட்டை அலுவலகத்தில் வைத்திருத்தல் பொதுமுகாமையாளரின் பொறுப்பாகும்.

## 44. பணியாளர் ஒழுக்காற்று நடைமுறை.

அ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதி 61-ன் ஏற்பாடுகளுக்கு அமைவாக எல்லாப் பணியாளர்களும் சங்கத்திற்குச் சேவையாற்ற வேண்டும்.

ஆ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக்கட்டளைச்சட்ட விதிகளின் இணைப்பு 1-இல் குறிக்கப்பட்டுள்ள சிறு குற்றங்களைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றம் சாட்டப்படும், ஒரு பணியாளருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகளைத் தொடக்குவதற்கு, விதி 77இன் படி, நெறியாளர்குழு அல்லது பொது முகாமையாளர் பொறுப்பாய் இருத்தல் வேண்டும்.

இ. ஒரு மாதத்திற்கு ரூ. 250/- மேலாகச் சம்பளம் பெறுத ஒரு பணியாளர் சிறு குற்றம் புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படுமிடத்து அல்லது குற்றஞ் சாட்டப்படுமிடத்து விதி 74 (2)இன் படி பொதுமுகாமையாளர் தானுகவோ அல்லது விதிகள் 74 (3) 75, 76 இன்படி சங்க நிறைவேற்றுத்துறை உத்தியோகத்தரின் மூலமோ விசாரணை நடைபெற ஏதுவாயிருத்தல் வேண்டும். விசாரணையின் போது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டு எண்பிக்கப்படுங்கால், பின்வரும் தண்டனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ பொதுமுகாமையாளர் விதிக்கலாம்.

1 கண்டிப்பு

2 கடுங்கண்டிப்பு

3 கண்டனம்

4 சம்பள ஏற்றத்தை நிறுத்தல்

அல்லது
5 ஒரு நாள் சம்பளத்துக்கு மேற்படாத குற்றப் பணம்.

ஈ. ஒரு மாதத்திற்கு ரூ. 250/- அல்லது அதற்குமேல் சம்பளம் பெறும் ஒரு பணியாளர், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டம் இணைப்பு 1—இல் குறிக்கப்பட்டுள்ள சிறு குற்றங்கள் புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படுமிடத்து அல்லது குற்றஞ் சாட்டப்படுமிடத்து, கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிகள் 74 (3) 75, 76 க்கு ஏற்ப பொது முகாமையாளர் விதி 74 (2) இன்கீழ் தாஞக விசாரணை நடாத்தி தனது அறிக்கையை தலைவர் அல்லது நெறியாளர் குழுவிற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். விசாரணை நடாத்திய உத்தியோகத்தரின் தகவுரைக்கு ஏற்ப, குற்றச்சாட்டுகள் எண்பிக்கப்படுமிடத்து தலைவர் அல்லது நெறியாளர்குழு, இந்நடைமுறைப் பிரமாணங்கள் 44 (இ) ன் படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தண்டனைகளை விதித்தல் வேண்டும்.

உ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுக் கட்டளைச் சட்டம் இணைப்பு (2) இல் அல்லது கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிகள் 71 அல்லது 115-ல் கூறப்பட்டுள்ள கடுங்குற்றங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை புரிந்ததாக ஒரு பணியாளர் சந்தேகிக்கப்படுமிடத்து, அல்லது குற்றஞ் சாட்டப்படுமிடத்து, நெறியாளர்குழு அல்லது பொதுமுகாமையாளர், விதி 77 இன்கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

ஊ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிகள் 71 அல்லது 115-இல் கூறப்பட்டுள்ள குற்றங்களில் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை ஒரு பணியாளர் புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படுமிடத்து அல்லது குற்றஞ் சாட்டப்படுமிடத்து, விதி 88 ஞல் நெறியாளர் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம், சங்கத்தின் புத்தகங்கள், ஆவணங்கள் வேறு சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, இத்தால் தலைவர் அல்லது பொதுமுகாமையாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றது.

எ. மேற்கூறப்பட்ட குற்றங்களில் எதன் ஒன்றிற்காக ஒரு பணியாளரின் சேவை தற்காலிகமாக நிறுத்தப்படுங்கால், சந்தேகப் பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்ட புத்தகங்கள், ஆவணங்கள், வேறு சொத்துகளைப் பொறுப்பேற்று, வியாபாரம் தடையின்றி நடைபெறும் பொருட்டு அவற்றினைப்பொருத்தமான ஒருவரிடம் கையளிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை

எடுக்கப்படல் வேண்டும். 14 நாட்களுக்குள் தற்காலிக வேலை நீக்கம் நெறியாளர் குழுவிற்கும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவிற்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

ஏ. ஒரு மாதத்திற்கு ரூ. 250/- மேற்படாத சம்பளத்தைப் பெறும் பணியாளர் ஒருவர் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதி 71 அல்லது 115 அல்லது இணைப்பு 2இல் கூறப்பட்டுள்ள ஏதேனும் குற்றத்தைப் புரிந்துள்ளார் எனச் சந்தேகிக்கப்படுமிடத்து அல்லது குற்றஞ் சாட்டப்படுமிடத்து பூர்வாங்க விசாரணை நிறைவேற்றுத்துறை உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படல் வேண்டும். இத்தகைய குற்றத்தைப் புரிந்தவர் எனச் சந்தேகிக்கப்படுபவர் அல்லது குற்றஞ் சாட்டப்படுபவர் ரூபா: 250 —க்கு குறையாத மாதச் சம்பளத்தைப் பெறுபவராகவிருக்குங்கால், பூர்வாங்க விசாரணையை பொதுமுகாமையாளரே நடாத்துதல் வேண்டும். 14 நாட்களுக்கு முன்னர் விசாரணை அறிக்கை நெறியாளர் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஐ. சேவையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பணியாளருக்கு, அவர் அவ்வாறு நிறுத்தப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடைய முன்னர், விதி 84 இன்கீழ் குற்றப்பத்திரம் நெறியாளர் குழுவினால் வழங்கப்படல் வேண்டும். குற்றப்பத்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 வாரங்களுக்குள் அப்பணியாளரினது விளக்கம் கோரப்படல் வேண்டும்.

ஒ குற்றஞ்சாட்டப்பட்ட பணியாளர் 6 வாரங்களுக்குள் ஒன்றில் குற்றச் சாட்டுக்களை ஒப்புக்கொள்ளல் வேண்டும் அல்லது விளக்கமளித்தல் வேண்டும்.

ஓ. குற்றஞ்சாட்டப்பட்ட பணியாளர் குற்றச்சாட்டுக்களை ஒப்புக் கொள்ளாவிட்டால், நெறியாளர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தினரால் அல்லது நெறியாளர் குழுவினால் விசாரணை நடாத்தப்படல் வேண்டும். நெறியாளர் குழு உறுப்பினரில் எவராவது பூர்வாங்க விசாரணையை நடாத்தியிருந்தால் அல்லது சாட்சியமளித்திருந்தால், விசாரணை உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு கூ. உ. ஆ. ஆணையாளர் கோரப்படல் வேண்டும். இவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் விசாரணை நடாத்தும் உத்தியோகத்தராக நெறியாளர் குழுவினால் நியமிக்கப்படல் வேண்டும்.

ஔ. விதி 74 (3), 75—ம் 76க்கும் கீழ் நடைபெற்ற விசாரணைக்குப் பின்னர் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள பணியாளர் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்படுமிடத்து நெறியாளர் குழு கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றை அல்

லது அதற்குமேல் விதிக்கலாம்.

1 சேவையை முடிவுறச் செய்தல்
2 வரிசைப் பதவியைக் குறைத்தல்
3 சம்பள ஏற்றத்தை நிறுத்தல் அல்லது பின்போடல்.
4 குற்றப்பணம் அறவிடுதல்
5 பொருத்தமான வேறு ஏதேனும் தண்டனை

## 45. பொது திறமையின்மைக்காக இளைப்பாறுதல் :

பணியாளர்களின் பொது திறமையின்மை குறித்து, கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவிதிகள் 92—க்கும் 93க்கும் கீழ் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

## 46. இலாபப் பங்கீடு :

அ. உபவிதி 87 (1)ற்கு அமைவாக இலாபங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்பு, மிகுதி இலாபங்களிலிருந்து 20 வீதத்திற்கு மேற்படாத தொகை அல்லது பணியாளரின் மொத்த மாதாந்த சம்பளங்களின் கூட்டு மொத்தத்திற்குச் சமமான தொகை (எது குறைவானதோ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதி 35க்கும் சங்க உபவிதி 87 (2) க்கும் அமைவாக பணியாளரிடையே பங்கிடப்படல் வேண்டும்.

ஆ. உபவிதி 87(ii)(ஆ)க்கு அமைவாக, உறுப்பினர்கள் நுகர்வுப் பகுதிக்கு அளிக்கும் ஆதரவுக்கு ஏற்ப அவர்களுக்கு அப்பகுதியினால் ஈட்டப்பட்ட மிகுதி வருமானத்திலிருந்து இலாப பாகம் வழங்கும் பொருட்டு உறுப்பினர்கள் ஒரு ஆண்டில் செய்த மொத்த கொள்வனவுகள் அடங்கிய இலாபமாக பதிவேடு திரட்டப்படலாம்; விற்பனைச் சுழற்சி வரி அறவிடப்படும் பொருட்கள் குறித்து வழங்கப்படும் விற்பனைச் சிட்டைகளை உறுப்புரிமை வகிக்கும் உறுப்பினர்கள் மூலம் ஆண்டுதோறும் அல்லது அரை ஆண்டுதோறும் சேகரிப்பதன்மூலம் இது செய்யப்படலாம்.

இ. இலாபத்திற்குரிய ரொக்கச் சிட்டைகளை இனங்காண்பதனை எளிதாக்கும் பொருட்டு அவற்றினை வேறு நிற மையில் அச்சிடலாம்.

## 47. உறுப்பினரினதும் பணியாளரினதும் பொதுநலச் செயற்பாடுகள் :

1 சூழ்நிலைகள்
2 கொடுக்கப்பட வேண்டிய உச்சத்தொகை
3 அங்கீகரிக்கும் அதிகாரி
4 பணம் செலுத்தப்படக் கூடிய நோக்கம்
5 இத்தகைய கொடுப்பனவுகள் யாருக்குக் கொடுக்கப்படல் வேண்டும் ஆகிய மேற்கூறியவற்றைக் குறித்து, உறுப்பினர்களுக்கும் அல்லது பணியாளர்களுக்கும் பொதுநல

வசதிகளை வழங்கும் பொருட்டு அங்கீகரிக்கப் பட்ட செலவினமாக அல்லது உபவிதிக 87(2) (எ)க்கு அமைவா ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் குறித்து விதிகள் வரையப்படல் வேண்டும்

## 48. நடைமுறைப் பிரமாணங்களுக்குத் திருத்தம் செய்தல் ;

இந்நடைமுறைப் பிரமாணங்களில் எவற்றையேனும் திருத்துதல் பொதுக் கூட்டத்தின் இசைவையும் பின்னர் கூ. உ. ஆ, ஆணையாளரின் அங்கீகாரத்தையும் பெறல் வேண்டும்.

.................... பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இல. 1 தொடக்கம் 48 வரையிலான இந் நடைமுறைப் பிரமாணங்கள் ............... திகதி) நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டு விதிப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கையொப்பம் ..........................
செயலாளர்

கையொப்பம் ..........................
தலைவர்

நெறியாளர்

1. ..........................
2. ..........................
3. ..........................
4. ..........................

நடைமுறைப் பிரமாணங்கள் இத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன :

திகதி :......................

..........................
கூ. ஆ. உ. ஆணையாளரின் கையொப்பம்.

(முற்றும்)

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவுச் சங்கத்தை நிறுவவேண்டும் என்ற இலக்கினை நான் கூட்டுறவுத் திணைக்களம் முன் வைத்துள்ளேன். இவ்விலக்கினை எய்துவதற்கு தமது பங்களிப்பினைச் செலுத்துமாறு மக்களையும் எனது அமைச்சிலுள்ள சகல திணைக்கள உத்தியோகத்தர்களையும் வேறு உத்தியோகத்தர்களையும் நான் வேண்டுகின்றேன்.''

D. P. R. குணவர்த்தன
விவசாய, உணவு அமைச்சர்

(வளரும்)

# தமிழகத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

ஜி. எஸ். ஷோத்திரி, ஐ. ஏ. எஸ்.,
சர்க்கரைத்துறை இயக்குநர்

விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டு மிகப் பெரும்பான்மையான மக்கள் வாழும் நமது நாட்டில், மக்களின் வாழ்க்கையில் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி விவசாயத்தை ஒட்டிய தொழில் வளர்ச்சியின் மூலமாகத்தான் ஏற்பட முடியும். இவற்றில் மிக முக்கியமான பங்கு வகிப்பது கரும்பை மூலப்பொருளாக்க் கொண்டு நடைபெறும் சர்க்கரை ஆலைகளே என்பதில் கருத்து வேறுபாடு சிறிதும் இருக்க முடியாது என்பது உறுதி. இத்தகைய சர்க்கரை ஆலைகளை, மூலப்பொருள் போதிய அளவிலும் உடனுக்குடனும் கிடைக்க வழி செய்ய வேண்டியதன் அவசியத்தை முன்னிட்டு, கிராமப்புறங்களிலே தான் அமைக்க முடியும். இவைகள் கிராமியப் பொருளாதார வளர்ச்சி மையங்களாக செயற்பட்டு, கிராமியப் பகுதிகளில் புரட்சிகரமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய செயல் திறன் கொண்டவை. குறுகிய காலத்தில் கிராமியப் பொருளாதார வளர்ச்சிக்கு இவற்றைவிடச் சிறந்த சாதனங்கள் இல்லையென்றே உறுதியாகக் கூறலாம்.

## சர்க்கரை ஆலைகள் ஏன்?

கரும்பு விவசாயம் நம் நாட்டில் பன்னெடுங் காலமாகத் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்ற ஒன்று. கரும்பினின்று வெல்லம் உற்பத்தி செய்வது நம் நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒரு தொழிலாகும். எனினும், இத்தொழில், கரும்பு உற்பத்தி செய்யும் மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளதாவென்று ஆய்ந்து பார்க்கும் அளவில், இல்லையென்றே புலனாகிறது. காரணம், வெல்லத்தின் விலையில் ஆண்டுக்காண்டு நிகழ்ந்து வருகிற மிகப் பெரிய ஏற்றத் தாழ்வுகளே. ஒரு ஆண்டில் வெல்லத்தின் விலை லாபகரமானதாக இருக்கலாம். ஆனால், அடுத்து வரும் ஆண்டுகளில் கரும்பு பயிரிட்டு, வெட்டி, வெல்லம் காய்ச்சி விற்கும் செலவுகளுக்குகூட கட்டுப்படியாகாத நிலையில் விலைகள் வீழ்ந்து படுவதையும், அதன் காரணமாக பலர் பயிரிட்ட கரும்பை தீயிட்டு அழித்துள்ள பலப்பல நிகழ்ச்சிகளை கரும்பு விவசாயத்தில் தொடர்ந்து ஈடுபட்டுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் பலர் அனுபவித்து உணர்ந்துள்

ளனர் என்பதும் நாம் அறிந்த ஒன்ருகும். எனவே, கரும்பு பயிரிடுவோரின் நலனைக் காக்க கரும்பிற்கு வெல்லத்தின் விலையில் ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படாது, ஒரு குறைந்த பட்ச விலையினைக்கொடுத்துவாங்கவும், இதனுல் தானும் லாபமடைந்து பயன்பெறவும் கூடிய தான நிறுவனம் தேவை என்பதனையுணர்ந்து அத்தகைய நிறுவனங்கள் தொடங்கப்பெற்றன. அவைகளே சர்க்கரை ஆலைகள்.

### கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஏன்?

மேற்கண்டவாறு அமைக்கப்பட்ட சர்க்கரை ஆலைகள் எல்லாம் தனியாராலேயே தொடங்கப்பட்டன. எனவே, இவை பெரும்பாலும் லாபநோக்கு ஒன்றையேகொண்டு, ஈட்டிய லாபமெல்லாம் இவற்றில் முதலீடு செய்துள்ள, கரும்பு விவசாயத்தில் நேரடியாகப் பங்கு பெருத தனியார்களுக்கே சேர்ந்தது. கரும்பு பயிரிடுவோர், அரசின் ஆணை காரணமாக தங்கள் பொருளுக்கு குறைந்தபட்ச விலைகள் பெற்று ஓரளவுக்கு நலம் பெற்ருர்கள் என்பது உண்மையேயானுலும், அவர்கள் பெறவேண்டிய அளவுக்கு முழுப்பயனையும் பெறவில்லை என்பதும் உண்மையே. இத்தகைய நிலையினை மாற்றி கரும்பு பயிரிடுவோர் முழு அளவில் அதன் பயனை அடையக்கூடிய வழிவகைகள் செய்ய வேறு விதமான நிறுவனங்கள் தேவைப்பட்டன.

அப்படிப்பட்ட நிறுவனங்களே கரும்பு பயிரிடுவோரைப் பங்குதாரர்களாகக் கொண்ட கூட்டுறவு சர்க்கரை ஆலைகள். இத்தகைய நிறுவனங்கள் மூலம் கரும்பு பயிரிடுவோர் மூலப்பொருள் உற்பத்தியாளர் என்ற முறையிலும், பங்குதாரர் என்ற முறையிலும், ஆக இரண்டு வகைகளால் பயன் பெறுகின்றனர்.

### தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்

தமிழ்நாட்டில் ஏழு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இப்போது இயங்கி வருகின்றன. அவை வடாற்காடு மாவட்டத்தில் ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் வடபுதுப்பட்டிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் வடபுதுப்பட்டிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் படாளத்திலும் கோவை மாவட்டத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் கிருஷ்ணபுரத்திலும், சேலம் மாவட்டத்தில், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில் மோகனூரிலும், தென்னுற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் மூங்கில்துறைப்பட்டிலும், மதுரை மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் அலங்கா நல்லூரிலும், தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் பாலக்கோட்டிலும் இயங்கி வருகின்றன. இந்த ஏழு ஆலைகளும் சேர்ந்து நாள் ஒன்றுக்கு 9,700 டன்கள் கரும்பு பிழியும் திறன் கொண்டவை. இவற்றில் மதுராந்தகம், அமராவதி, சேலம், கள்

ளக்குறிச்சி ஆலைகள் தங்கள் அரவைத் திறனை உயர்த்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றன.

**கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் என்ன செய்துள்ளன ?**

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கிராமியப் பொருளாதார வளர்ச்சி மையங்களாக மிகவும் திறம்பட செயற்பட்டு வருகின்றன. கடந்த 1973–74 சர்க்கரை ஆண்டில் 19·76 லட்சம் டன்கள் கரும்பு பிழிந்தும், 1·73 லட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்தும், நிறுவப்பட்டுள்ள அரவைத் திறனைவிட 31 சதவீதம் அதிக அளவு கரும்பு பிழிந்தும் இதுவரை கண்டிராத சாதனை பெற்றுள்ளன. முந்தைய 1972–73ம் ஆண்டினை ஒப்பு நோக்கும்போது 1973–74ம் ஆண்டில் கரும்பு பிழிவதில் 53 சதவீதமும் சர்க்கரை உற்பத்தியில் 58 சதவீதமும் அதிகரித்துள்ளது பெருமைப்படக்கூடிய சாதனை. சர்க்கரைக் கட்டுமானத்தில் தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஆலைகளிலும் முதல் நான்கு இடங்களைப் பெற்றுள்ளன. 22 கோடி ரூபாய்களுக்கு அதிகமாக கரும்பு பயிரிடும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கரும்பு விலையாகக் கொடுத்துள்ளன. இந்திய அரசு அறிவித்த விலையைவிட இவ்வாலைகள் ஆறேமுக்கால் கோடி ரூபாய்களுக்கு மேலாக கரும்பு பயிரிடுவோருக்கு அதிகம் விலைகள் கொடுத்துள்ளன. தமிழ்நாட்டில் கரும்புக்கு சர்க்கரை ஆலைகள் கொடுத்த விலைகளில் அதிகபட்ச சராசரி விலை கொடுத்தவை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளே. இவை இந்திய அரசுக்கு ஏழுகோடி ரூபாய்களுக்கு மேலும், மாநில அரசுக்கு இரண்டரை கோடி ரூபாய்கள் அளவிலும் வருவாய் ஈட்டித் தந்துள்ளன. பெரும் அளவில் தங்கள் நிதி நிலையைப் பெருக்கி ஒன்றுக்கொன்று உதவி புரிந்துள்ளன. தங்கள் பணியாளர்களுக்கு கணிசமான அளவில் பூரிப்பு ஊதியம் வழங்கியுள்ளன. பகுதி வளர்ச்சி நிதியென்றும் ஆலை வளர்ச்சி நிதியென்றும் திட்டங்கள் தொடங்கி ஆலைகள் உள்ள பகுதிகளின் வளர்ச்சிக்கும், ஆலைகளின் மேம்பாட்டிற்கும் திட்டமிட்டுள்ளன. மாநில அரசின் சமூக பொதுநலப் பணிகளிலும் நல்ல முறையில் பங்கு கொண்டு தொண்டாற்றியுள்ளன.

**புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்!**

மேற்கண்ட ஏழு கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தவிர மூன்று புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. அவற்றுள் இரண்டு வடாற்காடு மாவட்டத்தில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்ற பெயரில் ஆமுண்டி கிராமப்பகுதியிலும், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்ற பெயரில் கேதாண்டப்பட்டி கிராமப்பகுதியிலும், மூன்றாவது கோவை மாவட்டத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அவற்றுக்கான இயந்திர சாதனங்களுக்காக ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 377 இலட்சம் விலையில் அமைத்துக் கொடுக்க இயந்திர சாதனங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. வேலூர், கோயம்புத்தூர் ஆகிய இரண்டு ஆலைகளுக்குமான இயந்திர சாதனங்

கள் செய்து கொடுத்து, அவை களை அமைத்துத்தர லால்சந்த் நகர் தொழில் நிறுவனத்திட மும், திருப்பத்தூர் ஆலைக்கான இயந்திர சாதனங்கள் செய்து கொடுத்து அவற்றை அமைத் துத்தர புகாவ் உல்ப்ஃ நியூ இந் தியா பொறியியல் நிறுவனத்திட மும் ஒப்பந்தங்கள் செய்து கொ ள்ளப்பட்டுள்ளன. இவை ஒவ் வொன்றும் நாள் ஒன்றுக்கு 1250 டன்கள் கரும்பு பிழியக்கூடிய திறன் கொண்டவை.

புதிய ஆலைகள் நிறுவனச் செலவு

ஒவ்வொரு புதிய ஆலையையும் நிறுவி முடிக்க மொத்தச் செலவு ரூ. 625 இலட்சம் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ரூபா 400 லட்சம் இந்திய தொ ழில் நிதிக்கழகம், இந்திய தொ ழில் அபிவிருத்தி வங்கி, ஆயுள் காப்பீட்டுக் கழகம், இந்திய தொழில் கடன் முதலீட்டுக் கழ கம் ஆகிய நிறுவனங்களிடமி ருந்து நீண்டகாலக் கடனைப் பெற திட்டமிட்டு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன. மீதித்தொகையான ரூ. 225 லட்சத்தில் ரூ. 60 லட் சம் கரும்பு பயிரிடும் விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலிருந் தும், ரூ. 165 லட்சம் மாநில அரசிடமிருந்தும் பங்குத் தொ கையாகப் பெறப்படும்.

புதிய ஆலைகளில்
மாநில அரசு முதலீடு :

இந்த மூன்று புதிய ஆலைகளி லும், மாநில அரசு இதுவரை யில் ரூ. 377·93 லட்சம் பங்குத் தொகையாக முதலீடு செய்துள் ளது.

விவசாயப் பெருமக்கள் முதலீடு :

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையிலும், திருப்பத்தூர் கூட் டுறவு சர்க்கரை ஆலையிலும் இது வரையில் முறையே ரூ. 27 லட்ச மும், ரூ. 34 லட்சமும் இவ்வாலை கள் நிறுவப்படும் பகுதிகளில் உள்ள விவசாயப் பெருங்குடி மக் கள் பங்குத் தொகையாக முத லீடு செய்துள்ளனர்.

நிறைவு :

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் திறம்பட பணி புரிந்து நமது மா நில கிராமியப் பொருளாதார வளர்ச்சியில் சிறந்த முறையில் தொண்டு புரிந்து விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தர மான கரும்பு விதைக்கரணைகள் வழங்குவதில், இரசாயன உரங் கள் விநியோகித்தல், விவசா யத்திற்கும், நீர் இறைப்பான் கள், பேருந்துகள், இயந்திரக் கலப்பைகள் போன்றவை வாங் கவும், கிணறுகள் தோண்டுதல், ஆழப்படுத்துதல் போன்ற காரி யங்களுக்கும் கடன் வசதிகள் செய்து தந்தும், கரும்புப் பயிர் களைப் பூச்சிகள் அழிக்காது தடுப்பு மருந்துகள் தெளிக்க ஏற்பாடுகள் செய்தும், கிராமப் புறச் சாலைகளை நல்ல முறையில் பராமரித்தும், கரும்புக்கு லாப கரமான விலைகள் கொடுத்தும், விவசாயிகளுக்கு நல்ல ஆலோ சனைகள் கூறி அவற்றைச் செயற் படுத்த வழிவகைகள் செய்து கொடுத்தும், பற்பல நற்பணி கள் புரிந்து வருகின்றன.

இவற்றின் தொண்டு மேலும் வளர்ந்து, பெருகி, மக் கள் நல்வாழ்வுக்கும் பொருளா தார வளர்ச்சிக்கும், மேம்பாட் டுக்கும் பாடுபடும் நிறுவனங்க ளாகத் திகழும் என்று உறுதி யாக நம்பலாம்.

—நன்றி: கூட்டுறவு

# "கூட்டுறவு இயக்கத்தின் தொடர்புகள்"

திரு. ஆர். எம் நாகலிங்கம்
(விரிவுரையாளர், கூட்டுறவுப் பாடசாலை பொல்கொலை)

**1. தகவல் ஊட்டலின் பொருள்:-**

''தகவல் ஊட்டற்கலை'' என்ற நூலில் ஆசிரியர் ஏ. ஸி. லெயிரன் ''பதிலைப் பெறக் கூடியதாகச் செய்தியை அனுப்புதல்'' எனத் தகவல் ஊட்டலுக்கு வரைவிலக்கண கூறியுள்ளார். இயக்குநருக்குப் பயிற்சியளிக்கும் அமெரிக்கச் சங்கம் ''பரஸ்பர விளக்கம், நம்பிக்கை அல்லது நல்ல மனுசீகத் தொடர்பை ஏற்படுத்துவதற்காக எண்ணத்தை அல்லது தகவலைப் பரிமாறுவதை'' நல்ல தகவல் ஊட்டல் என வரவு செய்துள்ளது. ''முகாமைச் செய்முறை'' என்ற நூலில் நியூமன், சம்மர் ஆகிய ஆசிரியர்கள் ''இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களால் தரவுகள், எண்ணம், அபிப்பிராயம் அல்லது மன எழுச்சிகளைப் பரிமாறல் தகவல் ஊட்டல்'' என வரைவிலக்கணம் கூறியுள்ளார்கள். இவ்வரைவிலக்கணங்களிலிருந்து நாம் பெறக் கூடிய முக்கிய கருத்துக்களாவன:-

(அ) தகவல் ஊட்டல் ஒரு வழிப்பாதைச் செய்தி அனுப்புதல் மட்டுமல்ல.

(ஆ) தகவல் ஊட்டற் செயலில் கொடுப்பவர், பெறுபவர் ஆகிய இருபகுதியினர் பங்கு கொள்கின்றனர்.

(இ) தகவல் வழங்குபவர் தகவல் பெறுபவரின் பதிலைப் பெறக்கூடியதாகக் தகவல் வழங்க வேண்டும்.

(ஈ) எனவே தகவல் ஊட்டல் இரு வழிப்பங்கு கொள்ளும் செயல் முறையாகும்.

தகவலைக் கொடுப்பவர், பூரண விளக்கத்தைக் கொடுக்க மனப்பான்மையை மாற்ற அல்லது ஒரு செயலைச் செய்யத் தூண்டும் நோக்கத்துடன் தகவலை வழங்குகிறார். எனவே கொடுக்கப்படும் தகவலுக்கும் பெறுபவரின் பதில் என்ன என்பதைப் பெறுவது அவசியமாகும். இரு சாராரும் குறித்த பொது

இலக்கை முன்வைத்து அதில் ஆர்வம் காட்டும் பொழுதே தகவல் ஊட்டல் பயனளிக்கக் கூடியதாக அமையும். தகவல் ஊட்டுபவர் தான் கொடுக்கும் தகவல் பற்றிய பூரண விளக்கமுடையவராக இருப்பதுடன் தகவல் பெறுபவர் அதனை விளங்கக் கூடியதாகவும், தகவலின் நோக்கத்தை அடையக் கூடியதாகவும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

1. **தகவல் ஊட்டல் வழிகள்:**

தகவல் ஊட்டலுக்கு சைகை, எழுத்து, பேச்சு ஆகியன பயன்படுத்தப் படுகின்றன. மூகபாவனை அங்க அசைவு, வழிகாட்டிக்குறிகள், வெளிச்சவிளக்குகள் போன்றன சைகைக்கு உதாரணமாகும். அறிக்கை, கடிதம், கைநூல்கள், புத்தகங்கள், பத்திரிகைகள், சுற்றுநிருபம் விளம்பரப் பலகைகள் போன்றன எழுத்துமூறைத் தகவல் ஊட்டலுக்குஉதாரணமாகும். நேர்முக விசாரணைச் சந்திப்பு கூட்டங்களில் பேசுதல், கலந்துரையாடல் நடத்துதல், பதிவு நாடாக்கள் மூலம் செய்தி வழங்கல் பேன்றண பேச்சு மூலம் தகவல் வழங்கலுக்கு உதாரணமாகும். எவ்வழியைத் தெரிவு செய்யவேண்மென்பதை நிச்சயிப்பதில் தகவலின், தன்மை பெறுபவரின் திறமை, செலவு போன்றன கவனிக்கப்பட வேண்டும். முக்கியமாகத் தகவல் தெளிவுடையதாகவும், பெறுபவரின் பதிலைப் பெறத் தூண்டக் கூடியதாகவும் அமைய வேண்டும்.

2. **தகவல் பெறுபவர்:-**

ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர் ஒரே நேரத்தில் தகவலைப் பெறுபவர்களாக இருப்பர். இவர்கள் தகவலைப் பின் வரும் வழிகளில் நுகர்வார்கள்.

(அ) கேட்டல்:- பேசும் பொழுதும், பாடும் பொழுதும், பதிவு நாடாவை இயக்கும் போது கேட்கிறோம்.

(ஆ) **அவதானித்தல்:-** படம், வரைபடம், மாதிரிகள், சைகைகளை அவதானிப்பதன் மூலம் செய்தியைப் பெறுகிறோம்.

(இ) **வாசித்தல்:-** எழுதப்பட்ட, அச்சிட்ட செய்திகளை வாசிப்பதன் மூலம் நுகரப்படுகின்றன.

3. தகவல் ஊட்டல் கட்டங்கள்:-

(அ) தகவல் வழங்கல்

(ஆ) தகவல் பெறுதல்

(இ) பின்தொடர் நடவடிக்கை அல்லது மதிப்பீடு.

4. தகவல் ஊட்டலைப் பாதிக்கக் கூடிய சில முக்கிய காரணிகள்:-

(அ) கோபம், பொறுமை, ஆர்வம், சந்தேகம் போன்ற உணர்வுகள்.

(ஆ) உடல்நிலை—(நாங்கள் சில சமயம் நோய் வாய்ப்பட்டு அல்லது அங்கவீனப்பட்டு இருக்கலாம்).

(இ) கல்வி நிலை:—

(எழுத்தறிவு இல்லாலாமை. சாதாரண எழுத்து வாசனை, அறிவு, சாதாரண உயர்பிரிவு பட்டதாரிப் படிப்பு)

(ஈ) வயது நிலை:—(சிறுவர், இளைஞர், வயோதிபர்)

(உ) தொழில் நிலை:-

(ஆசிரியர், எழுதுவினைஞர், கணக்காளர், கமக்காரர், கூலித் தொழிலாளி)

(ஊ) பொருளாதார நிலை:— (பணக்காரர், வறியவர்)

(எ) புத்திநிலை:— (கூர்மையான புத்தி, மந்த புத்தி, சராசரி)

(ஏ) அரசியல் நிலை:- (நாம் ஏதோ ஒரு அரசியல்கட்சி சார்புடையவராக இருக்கிறோம்.

(ஐ) இடை நிலை:- (தகவல் பரிமாறும் இடத்தின் அமைப்பு, சூழல், வெளிச்சம், காற்றோட்டம்)

(ஒ) மொழி:— (உபயோகிக்கும் மொழி பெறுபவரின் அனுபவத்திற்கேற்ப விளங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.)

2. தகவல் ஊட்டலின் முக்கியத்துவம்:-

கூட்டுறவுத் தாபனங்கள் ஏனைய தாபனங்கள் போல் தங்களுடைய கிடைக்கக் கூடிய மட்டுப் படுத்தப்பட்ட பணம், பொருள், இயந்திரம், மனித சக்தியாகிய சாதனங்களை உத்தம அளவில் பயன்படுத்தி தாபன இலக்கை அடையச் செய்வது அவசியமாகும். இது முகாமையின் பிரதான

நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதில் முகாமை, பங்காளர், இயக்குனர்கள், பணியாளர், வாடிக்கையாளர், பொது மக்கள், கடன் வழங்குவோர், பொருள் – சேவை வழங்குபவர், அரசாங்க திணைக்களங்கள், ஏனைய கூட்டுறவு தாபனங்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியது இன்றியமையாததாகும். இத்தகைய ஒவ்வொரு பகுதியினரையும் திருப்தி நிலையில் வைத்திருப்பதிலேயே முகாமை அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவது தங்கியுள்ளது. எல்லாப் பகுதியினரையும் இணைத்து எல்லாருடனும் நல்ல தொடர்பை வளர்க்க வேண்டும். முரண்பட்ட நோக்கங்களைக் கொண்ட பல்வேறுபட்ட குழுவினர்களிடையே திருப்தி நிலையை வளர்க்க நல்ல தகவல் ஊட்டல் முறை வளர்க்கப்பட வேண்டும். இதன் மூலமே தாபனத்தின் நடவடிக்கைகள் இணக்கக் கூடியதாக அமையும். சம்பந்தப்பட்ட மனிதர்களின் மனப்பான்மைகள், நடவடிக்கைகளை மாற்றவும், அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் தகவல் முறை இன்றியமையாததாகும். ஒருவரை ஒருவர் அறியவும், ஒவ்வொருவரையும் இணக்கவும், தப்பெண்ணங்களைப் போக்கவும் கூட்டாகக் கருமமாற்றவும் தகவல் பரிமாற்றம் முக்கிய இடத்தை வகிப்பதால் தகவல் ஊட்டலை ஒரு தனி முகாமைத் தொழிற்பாடாகச் சில முகாமை ஆசிரியர்கள் வகைப்படுத்தி முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். முகாமையாளர்கள் தங்களுடைய நோக்கத்தை அடைவதில் தகவல் ஊட்டலை ஒரு முக்கிய கருவியாக உபயோகிக்கிறார்கள். இத்தொழிற்பாட்டுத் திறனை வளர்க்கும் பொருட்டு எமது கூட்டுறவு தாபனங்களும் மேலும் காலம் தாழ்த்தாது அதிக கவனம் செலுத்த வேண்டியது அவற்றின் வெற்றிக்கு அவசியமாகும்.

## 3. முகாமை கவனிக்க வேண்டியவை:-

### 3.1. முகாமையின் கொள்கை

தகவல் ஊட்டல் முகாமையின் ஒரு முக்கிய தொழிற்பாடென்பதைக் கவனித்தோம். இதன் தொடர்பாக முக்கிய கவனம் எடுத்தல் அவசியமாகும். இதன் பொருட்டு

தனது கொள்கைகள், இலக்குகள் குறித்து திடமான வரையறுப்புக்களைச் செய்து கொண்டு அவற்றைச் சரியான முறையில் தகவல் ஊட்டுவதற்கான கொள்கையை வருவித்துக் கொள்ள வேண்டும். நான்செய்யப் போகிறேன்? எங்கே போகிறேன்? எப்படி? எப்போ? என்பவற்றை வரையறுக்காவிட்டால் யாருக்கு? எதை? எப்போ? ஏன்? சொல்ல வேண்டுமென்ற நிலையைவரையறுக்க முடியாமல் இலக்கற்ற தகவல் முறையைக் கையாள நேரிடும்.

2. **நல்ல தகவல் ஊட்டல் முறைகளுக்குரிய சில வழிகாட்டிகள்:–**

(1) எல்லா மட்டத்திலுமுள்ள பணியாளர்களுக்கும்.ஏனையவர்களுக்கும் பொருத்தமான தகவல் வழங்கப்படுகின்றதா?

(2) விளங்கக் கூடிய முறையில் தகவல் வழங்கப்படுகிறதா?

(3) உரிய நேரத்தில் தகவல் வழங்கப்படுகிறதா?

(4) தகவல் பெறுபவர் மதிக்கப்படுகின்றாரா?

(5) தகவல் கொடுப்பவர் மதிக்கப்படுகின்றாரா?

(6) தகவல் முறைவழி தாபனத்தின் வலுவுள்ள இணைப்புக்கு ஏற்றதா?

(7) தகவல் முறை நெகிழ்ச்சியும், சிக்கனமும் உடையதா?

4. **பணியாளர்களுக்குத் தகவல் ஊட்டல்:-**

**4. 1. பணியாளர்களுக்குத் தகவல் தேவை:-**

**4. 1. 1.** சுயதேவைத் தகவல்:- மகிழ்ச்சியற்ற அல்லது திருப்தியற்ற உணர்வைத் தவிர்க்கும் பொருட்டு ஒவ்வொரு பணியாளரும் தனதுசம்பளம், சேவை நிபந்தனை, வேலை நேரம், மேலதிக வேலை நேரம், பணக் கொடுப்பனவு முறை, அந்தஸ்து ஏனைய வசதிகள் எதிர்கால முன்னேற்றம் போன்றவற்றைத் தெரிந்திருப்பது அவசியமாகும். (வளரும்)

---

[இலங்கை மன்றக் கல்லூரியில் ''வளர்ந்தோர் கல்வி முறைகளும் கலை நுட்பங்களும்'' பற்றி அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் வாசிக்கப்பட்டது]

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

## வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு    ஆசன அமைப்பு

மின் ஒளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

### வாடகைக் கட்டணங்கள்

| | |
|---|---|
| **நாடகம் நடனம்** | |
| இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| பகல் .. .. | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | |
| இரவு .. .. | 175-00 |
| பகல் .. .. | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | |
| இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் - பகல் அல்லது இரவு** | |
| முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** இரவு | 150-00 |
| பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.


தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக் குழு)
12, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 7238



Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation Ltd.), 12, K.K.S. Road, Jaffna and Printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna, (formerly Northern